**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES D.W.1**
**OS.NO.129/2019**

**Name** : Saminathan
**Father/Husband Name** : Govindhasamy

**Age** : 75

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.06.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 02.50 p.m

**குறுக்கு விசாரணை**

என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 3 ஆண்கள் மற்றும் 3 பெண்கள். 2 வது பிரதிவாதி சண்முகம் என் தம்பி. மூர்த்தி என் தம்பி,. அவர் 2013 ல் இறந்துவிட்டார். 3 வது பிரதிவாதி சரிதா என்பவர் மூர்த்தியின் மனைவி. அவர்களுக்கு 3 பெண் பிள்ளைகள் முறையே பிரதிவாதிகள் 4 முதல் 6 ஆகும். வாதிகள் சாந்தி. பூங்கொடி. மற்றும் கிருஷ்ணவேணி ஆகியோர்கள் என்னுடன் பிறந்தவர்கள். என் தாத்தா பெயர் குள்ள கவுண்டர். தாவா சொத்துக்கள் அனைத்தும் குள்ள கவுண்டர் என்பவரின் தாத்தா மூலமாக வழி வழியாக வந்ததாகும். என் தாத்தா பணம் எதுவும் கொடுத்து வாங்கவில்லை. அது வழி வழியாக வந்தது.

குள்ள கவுண்டரின் அப்பா பெயர் தெரியவில்லை. சின்னய்ய கவுண்டர் மற்றும் மகாதேவ கவண்டர் ஆகியோர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை. குள்ள கவுண்டருடன் உடன் பிறந்தவர்கள் தெரியாது. குள்ள கவுண்டர் உடன் எத்தனை பேர் பிறந்தார்கள் என்றால் தெரியாது. குள்ள கவுண்டரின் வாரிசுகள் தாயம்மாள் மற்றும் என் அப்பா கோவிந்தசாமி. குள்ள கவுண்டர் எப்போது

காலமானார் என்றால் நான் பிறப்பதற்கு முன்பே அவர் காலமாகி விட்டார்.

நான் படிக்கவில்லை. பிறந்ததிலிருந்தே நான் விவசாயம் தான் பார்த்து வருகிறேன். தாயம்மாளுக்கு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் அவர் வாய் பேசாதவர். அவருக்கு திருமணம் ஆகவில்லை. குழந்தைகள் இல்லை. என் தம்பி சண்முகமும் படிக்கவில்லை. என் தாத்தா, என் அப்பா, என் தம்பி மற்றும் நான் தலைமுறை தலைமுறையாக விவசாயம் தான் செய்கிறோம்.

வாதிகள் 3 பேரும் திருமணமாகி அவர்கள் கணவருடன் அவரவர் வீட்டில் இருக்கிறார்கள். அனைவரும் என் ஊர் பக்கமே தான். என் ஊருக்கு 1 கி.மீ. தூரத்தில் சுற்றி உள்ளார்கள். வாக்குமூலத்தில் என் தாத்தா குள்ள கவுண்டருடன் பிறந்தவர்கள் தெரியாது. என் அப்பாவுடம் பிறந்தவர்கள் ஒருத்தர் மட்டும் தான். அவர் வாய் பேச முடியாதவர். ஆண் வாரிசு என்றால் குள்ள கவுண்டருக்கு என் தந்தை மட்டும் தான். குள்ள கவுண்டர் காலமான பிறகு என் அப்பா அந்த சொத்தை அனுபவித்து வந்தார்.

**விசாரணை முடிந்த நேரம்:** 03.05p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.